1978 மார்ச் 6]

உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் ஆசிரியர்கள்.

*409 வினு—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு ( Engineering Instructors ) இன்னும் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமை குறித்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) இக்கோரிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை என அரசாணை எண். 333 கல்வி, நாள் 14—2—77-ல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையினை மீண்டும் மறுபரிசிலனை செய்து தேர்வுநிலை அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப் படாமல் நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாகப் பல தடவைகள் மந்திரி அவர்களிடத்திலும், டைரக்டர் அவர்களிடத்திலும் நேரடியாகச் சொல்லியும்கூட இன்று வரை அது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி எப்போது முடிவு எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தப் பரிசீலனை முடிந்தவுடன் முடிவு அறிவிக்கப்படும்.

பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர்

*410 வினு—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, புத்தூரில் இருக்கும் பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி செயல்படாமல் இருக்கிறதா ?